**“மழைநீர் சேமிப்போம்”** **பிளாஸ்டிக்கை தவிர்ப்போம் “**

நகராட்சி அலுவலகம்,
தேனி – அல்லிநகரம் ,
நாள் : 14.09.2020.

## நகர்மன்ற அவசர கூட்ட அழைப்பிதழ்

நிகழும் திருவள்ளுவர் ஆண்டு 2051 சார்வரி வருடம், ஆவணி மாதம் 29-ம் நாள் 14.09.2020-ம் தேதி திங்கள் கிழமை காலை 10.35 மணி அளவில் நகர்மன்ற அலுவலகத்தில் உள்ள கூட்ட மண்டபத்தில் நகர்மன்ற அவசரக் கூட்டம் நடைபெறும்

தனி அலுவலர் மற்றும் ஆணையாளர்
தேனி – அல்லிநகரம் நகராட்சி

**பொருள் 01 :**

தேனி – அல்லிநகரம் நகராட்சியின் விரிவாக்கப்பகுதியில் புதியதாக தார்ச்சாலை, மழைநீர் வடிகால் மற்றும் பேவர் பிளாக் சாலைகள் அமைக்கும் பணிக்கு ரூ.131.00 இலட்சம் மதிப்பீட்டில் விரிவான திட்ட மதிப்பீடு தயார் செய்யப்பட்டு இந்நகர்மன்ற தீர்மான எண். 1485, நாள். 30.06.2020-ல் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு பணிகள் மேற்கொள்ளுவதற்கு நிர்வாக அனுமதியும், மற்றும் நிதி ஒதுக்கீடு செய்து வழங்க கோரி நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களுக்கு கருத்துரு அனுப்பப்பட்டுள்ளது.

அதன்படி நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (MA.2) அரசாணை எண் (D). 303, நாள்.09.09.2020-ல் மேற்படி பணிகளை 2020 - 2021-ம் ஆண்டின் ஒருங்கிணைந்த நகர்புற வளர்ச்சி திட்டத்தின் கீழ் மேற்கொள்ளுவதற்கு மதிப்பிடப்பட்ட செலவு தொகையான ரூ.113.69 இலட்சத்தில் கீழ்காணும் அட்டவணையில் குறிப்பிட்டுள்ள பணிகளை மேற்கொள்ளுவதற்கு நிதி ஒதுக்கீடு உத்தரவிடப்பட்டுள்ளது.

அதில் ரூ.90.95 இலட்சம் ஒருங்கிணைந்த நகர்புற வளர்ச்சி திட்டத்தின் மானியத் தொகையாகவும், மீதமுள்ள தொகை ரூ.22.74 இலட்சம் நகராட்சி பங்களிப்பு தொகை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் மேற்படி திட்டத்தின் கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்ட மொத்த மதிப்பீட்டு தொகை ரூ.113.69 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்து மேல் நடவடிக்கை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| Package | Name of Work | Est.Cost ( Rs.In Lakhs ) |
|---|---|---|
| 1 | Formation of BT Road at Old GH road Cross street, Penny cuick nagar 40' Scheme road, Vasuki colony cross street, Kakkanji colony connecting road & Vengala nagar C - C Scheme road With Storm water drain in (Ward no : 18, 32, 33 & 12) and Providing paver block road at Meranda lane in (Ward no : 15), in Theni - Allinagaram Municipality. | 113.69 |

**அலுவலகக்குறிப்பு:—**

அ ) மன்றம் அனுமதிக்கலாம்

ஆ ) மேற்படி திட்டத்தின் கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்ட மொத்த தொகை ரூ.113.69 இலட்சத்தில் ஒருங்கிணைந்த நகர்புற வளர்ச்சி திட்டத்தின் மானியத்தொகை ரூ. 90.95 இலட்சம் போக மீதமுள்ள தொகையான ரூ.22.74 இலட்சத்தினை நகராட்சி பொதுநிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண். 3374 / 2018 / இ1**

**தீர்மான எண்:** 1520

**தீர்மானம் :** அலுவலகக்குறிப்பு அ ) மற்றும் ஆ) அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் 02 :</u>**

இந்நகராட்சி பொதுப்பிரிவில் பணிபுரிந்து வரும் திரு.மு.முகுந்தன், இளநிலை உதவியாளர் 07.09.2020-ம் தேதிய விண்ணப்பத்தில் அன்னாருக்கு 29.10.2020-ம் தேதியன்று திருமணம் நடைபெறவுள்ளதால், மேற்படி திருமண செலவிற்கு தொகை ரூ.6000/- முன்பணம் வழங்க கோரியுள்ளார். தனியரது விண்ணப்பம் மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:—**

1 ) அனுமதிக்கப்பட்டது

2 ) நகராட்சி பொது நிதியிலிருந்து திருமண முன்பணம் தொகை ரூ. 6000/- வழங்கிட அனுமதிக்கலாம்.

**ந.க.எண். 2076 / 2020 / இ1**

**தீர்மான எண்:** 1521

**தீர்மானம் :** அலுவலகக்குறிப்பு அ ) மற்றும் ஆ) அனுமதிக்கப்பட்டது.

## பொருள் 03 :

தேனி – அல்லிநகரம் நகராட்சி அலுவலகத்தில் 2018 - 2019-ம் ஆண்டிற்கு பின் பொறியலில் பட்டயம் மற்றும் பட்டப்படிப்பு முடித்துள்ள இளம் பட்டதாரிகளுக்கு Internship Training பயிற்சி வழங்கப்பட உள்ள விபரத்தினை தமிழ் நாளிதழில் மாவட்ட அளவில் விளம்பரம் மேற்கொண்டதற்கு கீழ்கண்ட நிறுவனத்திடமிருந்து பட்டியல் வரப்பெற்றுள்ளது.

| வ.எண். | நாளிதழ் | செய்தி மக்கள் தொடர்பு துறை அனுமதி விபரம் | தொகை ( ரூ ) |
|---|---|---|---|
| 1 | தினத்தந்தி | செ.ம.தொ. வெ.ஆ.எண். 97 நாள். 31.08.2020 | 4838 |

மேற்கண்ட தொகை ரூ.4838/-ஐ இந்நகராட்சி பொதுநிதியிலிருந்து வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:-**

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) மேற்கண்ட செலவினத்தை இந்நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்.** 80 / 2020 / இ1

**தீர்மான எண்:** 1522
**தீர்மானம்** : அலுவலகக்குறிப்பு அ ) மற்றும் ஆ) அனுமதிக்கப்பட்டது.

## பொருள் 04 :

தேனி - அல்லிநகரம் நகராட்சியில் 2020 - 2021-ம் ஆண்டு பெரியகுளம் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டத்தின் கீழ் ரூ.8.00 இலட்சம் மதிப்பீட்டில் அல்லிநகரம் பேருந்து நிறுத்தத்தில் பயணியற் நிழற்குடை கட்டும் பணிகள் மேற்கொள்ளுவதற்கு 03.09.2020-ம் தேதியில் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. மேற்காணும் பணிக்கு நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொண்டவர்கள் கோரிய ஒப்பந்தப்புள்ளிகளின் விபரம் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி கோரிய தொகை (ரூ) (வரிகள் நீங்கலாக ) | மதிப்பீட்டை விட கூடுதல் / குறைவு சதவீதம் |
|---|---|---|---|
| 1 | திரு.ஜி.ஸ்டாலின், நகராட்சி ஒப்பந்ததாரர், தேனி | 695013.36 | 0.50 % அதிகம் |

| | | | |
|---|---|---|---|
| 2 | திருமதி.எஸ்.சிட்டு, நகராட்சி ஒப்பந்ததாரர், தேனி | 688970.41 | 0.37 % குறைவு |

**<u>அலுவலகக்குறிப்பு</u> :–**

**அ)** மேற்கண்ட பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளியில் குறைவான விலை விகிதம் கோரிய திருமதி.எஸ்.சிட்டு, என்பவரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண் : 1842 / 2020 / இ1**

**தீர்மான எண்:** 1523

**தீர்மானம் :** அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

## <u>பொருள் 05 :</u>

தேனி – அல்லிநகரம் நகராட்சிக்குச் சொந்தமான பழைய யூனியன் ஆபிஸ் சாலையிலுள்ள சுகாதார ஆய்வாளர் 2-க்கான கட்டிடம் பழுதடைந்த நிலையில் மோசமான நிலையில் இருப்பதால் அக்கட்டிடத்தினை இடித்து அப்புறப்படுத்தி விட்டு புதியதாக கட்டிடம் கட்டும் பொருட்டு, மேற்படி கட்டிடத்தில் இருந்து அகற்றப்பட்ட இரும்பு கேட் ( Grill Gates ) எடை 103 கிலோ, 9.14 சதுர மீட்டர் அளவுள்ள கதவுகள் மற்றும் மர கதவுகள் & ஜன்னல்கள் ஆகியவைகளை மீண்டும் பயன்படுத்த முடியாத நிலையில் இருப்பதால் அதனை கழிவு செய்திட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு</u>** :-

மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண். 835 / 2020 / இ1**

**தீர்மான எண்:** 1524

**தீர்மானம் :** அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

## <u>பொருள் 06 :</u>

*இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் விரிவு அபிவிருத்தி திட்டத்தின் கீழ் பல்வேறு திட்டச் சாலைகள் அமைத்து பொதுமக்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளது. மேற்கண்ட திட்டச் சாலைகள் அமைப்பதற்கு பெரும்பாலான தனியர் நில உரிமைதாரர்கள் தாமாக முன் வந்து நிலங்களை நகராட்சிக்கு பதிவு ஆவணங்கள் மூலம் ஒப்படைப்பு செய்துள்ளனர். மேற்கண்ட விரிவாக்கத் திட்டச் சாலைகளில் தனியார் நில உரிமைதாரர்களால் ஒப்படைப்பு செய்யப்பட்ட இடங்களை உட்பிரிவு செய்து நகரளவை*

*பதிவேட்டில் ஆணையாளர்,தேனி அல்லிநகரம் நகராட்சி என்ற பெயருக்கு பெயர் மாற்றம் செய்வதற்கு உட்பிரிவு பணிக்காக ஓய்வு பெற்ற நகரளவை ஒருவரை மாவட்ட ஆட்சித் தலைவர்,தேனி அவர்களால் நிர்ணயம் செய்யப்பட்டுள்ள ஊதியத்தில் நியமனம் செய்து பணிகள் மேற்கொள்வதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டடப்படுகிறது.*

***அலுவலகக்குறிப்பு:***

1) *மன்றம் பதிவு செய்யலாம்.*
2) *மேற்கண்ட செலவினத்தினை நகராட்சி பொது நிதியில் மேற்கொள்ள அனுமதிக்கலாம்.*
3) *மன்றம் அனுமதிக்கலாம்.*

***ந.க.எண் : 1563 / 2020 / சி1***

**தீர்மான எண்:** 1525

**தீர்மானம் :** அலுவலகக்குறிப்பு 1, 2, மற்றும் 3 அனுமதிக்கப்பட்டது.

## பொருள் 07 :

தேனி - அல்லிநகரம் நகராட்சி வார்டு எண்:26 பழைய டி.வி.எஸ் சாலையில் அமைந்துள்ள பொது கழிப்பிடம் திரு.K.சிவச்சந்திரன் என்பரால் குத்தகை எடுக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட கழிப்பிடம் மிகவும் பழுதடைந்த நிலையில் தொடர்ந்து பயன்படுத்திட இயலாத நிலையில் உள்ளதால் குத்தகை தொகை செலுத்த இயலவில்லை என குத்தகைதாரர் தெரிவித்துள்ளார்.

மேற்கண்ட பொது கழிப்பிடம் சுமார் 35 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்டுள்ள நிலையில் தற்போது மிகவும் பழுதடைந்துள்ள நிலையில் உள்ளதாலும், கழிப்பிடம் வடிகாலின் மீது கட்டப்பட்டுள்ளதால் மழைக்காலங்களில் தண்ணீர் செல்ல முடியாத நிலை உள்ளதாலும், மேலும் கழிப்பறைக்குள் தண்ணீர் தேங்கி அடைப்பு ஏற்படும் நிலையில் கழிப்பிடத்தினை தொடர்ந்து பயன்படுத்திட இயலாத நிலையில் உள்ளதால், சுகாதார சீர்கேடு ஏற்படுவதை தவிர்க்கும் பொருட்டு கழிப்பிட கட்டிடத்தினை இடித்து அப்புறப்படுத்திட வேண்டும் என நகராட்சி பொறியாளர் தெரிவித்துள்ளார்.

எனவே மேற்கண்ட கழிப்பிடத்திற்கு 2019-20-ம் ஆண்டு குத்தகைக்கான நிலுவைத் தொகையினை அன்னாரது வைப்புத் தொகையில் ஈடுசெய்திடவும், மேலும் 01-04-2020 முதல் மேற்கண்ட குத்தகை இனத்தினை ரத்து செய்திடவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| வ. எண் | வரிவிதிப்பு எண் | குத்தகை இனம் | காலம் |
|---|---|---|---|
| 1 | 125/BD01/00009 | பழைய டி.வி.எஸ் சாலை ஆண்கள் பொது கழிப்பிடம் | 01-04-2020 முதல் |

**<u>அலுவலக குறிப்பு</u> :**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண் :1414 / 2019 / அ3**

**தீர்மான எண்:** 1526

**தீர்மானம் :** அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

தனி அலுவலர் மற்றும் ஆணையாளர்
தேனி – அல்லிநகரம் நகராட்சி